

**05, 14, 23 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு:**

எதிர்பாராத நிகழ்வுகளால் கலக்கமடையாமல் தெளிந்த முடிவுகளை எடுக்கும் தன்மையுள்ள எண்ணில் பிறந்துள்ள உங்களுக்கு நிதானத்துடன் காரியமாற்றும் தன்மை ஏற்படும். வித்தியாசமாகச் சிந்தித்து செய்தொழிலை விரிவுப்படுத்துவீர்கள். நண்பர்களின் பலம், பலவீனம் இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்து செயலாற்றுவீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவக் காண்பீர்கள். நண்பர்களின் புகழ்ச்சிக்கு இந்த வாரம் சிறிது மயங்குவீர்கள். வருமானம் ஓரளவு நன்றாக இருப்பதால், வசிக்கும் வீட்டை புதுப்பிப்பீர்கள். உறவினர்கள் செய்த பழைய தவறுகளை மறந்து, சிரித்த முகத்துடன் பழகுவீர்கள். அவசியம் இல்லாத பொருட்களை வீட்டுக்கு வெளியே வீசிவிடுவீர்கள்.

**அதிர்ஷ்ட நாட்கள் :** 3,6. **அதிர்ஷ்ட எண்கள் :** 2, 8.



**06, 15, 24 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு:**

உணர்ச்சிவசப்பட்டாலும் உடனடியாக அதிலிருந்து விடுபட்டுவிடும் தன்மையுள்ள எண்ணில் பிறந்துள்ளவர்களே! நீங்கள் உங்கள் செயல்களை நன்கு திட்டமிட்டுச் செய்து முடித்து வெற்றியடைவீர்கள். சமுதாயத்தில் உயர்ந்தவர்களிடம், உங்கள் தொழில் வளர்ச்சியடையத் தேவையான உதவிகளைக் கோருவீர்கள். வருமானம் சிறிது ஏற்ற இறக்கமாகவே இருக்கும். பொதுக் காரியங்களில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். உங்களின் பேச்சாற்றலால் அனைவரையும் கவருவீர்கள். அதேநேரம் குழந்தைகள் விஷயத்தில் முக்கிய முடிவுகளை எடுக்கும் முன், அனுபவஸ்தர்களின் ஆலோசனைப்படி எடுக்கவும். உங்கள் ரகசியங்களை சகோதர, சகோதரிகளிட பகிர்ந்து கொள்ள வேண்டாம். மற்றபடி, பெற்றோர் விஷயங்களில் நீங்கள் சூழ்நிலைக் கைதியாக இருப்பீர்கள்.

**அதிர்ஷ்ட நாட்கள் :** 3,7. **அதிர்ஷ்ட எண்கள் :** 4, 6.



**07, 16, 25 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு:**

முறையற்ற வகையில் வரும் எதையும் சொந்தம் கொண்டாட மறுக்கும் தன்மையுள்ள எண்ணில் பிறந்துள்ள உங்களுக்கு இந்த வாரம் புதிய வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். உங்களின் கீழ் பணிபுரிபவர்களுக்குத் தக்க அறிவுரைகள் கூறி, நிலைமையை உங்கள் கட்டுக்குள் கொண்டு வருவீர்கள். பெற்றோருடன் இணக்கமாகப் பழகி, அவர்களின் அன்பைப் பெறுவீர்கள். சகோதர, சகோதரி வழியிலும் நன்மைகள் உண்டாகும். புதிய நுணுக்கமான விஷயங்களில் நேரடியான பயிற்சிகளை மேற்கொள்வீர்கள். பழைய கடன்கள் வசூலாகும். வழக்குகளில் சாதகமான தீர்ப்புகள் வரும். இல்லத்தில் இது வரை தடையாகியிருந்த சுப காரியங்கள் நடக்கும். மற்றபடி உடல் நலத்தையும், மன வளத்தையும் பெருக்கிக் கொள்ள யோகா, தியானம் போன்றவற்றைச் செய்வீர்கள்.

**அதிர்ஷ்ட நாட்கள் :** 5, 6. **அதிர்ஷ்ட எண்கள் :** 3,9.



**08, 17, 26 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு:**

'தனித்துச் செய்வதைவிட கூட்டு முயற்சியில்தான் சிறப்பான பலன்களைப் பெற முடியும்' என்ற நம்பிக்கையுள்ள எண்ணில் பிறந்துள்ளவர்களே! நீங்கள் கொடுக்கல், வாங்கல் விஷயங்களில் அனுகூலங்களைக் காண்பீர்கள். புதிய நட்புகள் கிடைக்கும். எடுத்த காரியங்களை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். குதர்க்கம் பேசும் நண்பர்களை சாந்தப்படுத்துவீர்கள். அரசாங்கத்திலிருந்து எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். நோய் உபாதைகளிலிருந்து விடுபடுவீர்கள். அனைவரிடமும் கலகலப்பாகப் பேசுவீர்கள். குழந்தைகள் உங்களின் மனதைப் புரிந்துக் கொண்டு நடப்பார்கள். அதேநேரம் வீடு மாற்றும் எண்ணத்தை இந்த வாரம் தள்ளி வைக்கவும்.

**அதிர்ஷ்ட நாட்கள் :** 4, 8. **அதிர்ஷ்ட எண்கள் :** 5, 7.



**09, 18, 27 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு:**

தோல்விகளைக் கண்டு பயப்படாமலும், வெற்றிகளைக் கண்டு ஆச்சரியப்படாமலும் தெய்வ பலத்தையே முழுமையாக நம்பி காரியங்களைச் செய்யும் தன்மையுள்ள உங்களுக்கு இந்த வாரம் பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். செய்தொழிலை வெற்றிப் பாதையில் செலுத்துவீர்கள். பொது நலக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். புதிய அசையாச் சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டாகும். உற்றார், உறவினர்களால் நன்மைகள் ஏற்படும். சகோதர, சகோதரிகளிடம் விட்டுக் கொடுத்து பழகுவீர்கள். அதேநேரம் முன்கோபத்தைக் குறைத்துக் கொண்டு உங்கள் செயல்களைச் செய்யவும். வீணாகச் சட்டச் சிக்கல்களில் மாட்டிக் கொள்ள வேண்டாம். மேலும் வயிறு சம்பந்தமான உபாதைகள் ஏற்பட வாய்ப்புள்ளதால், உடல் நலத்தில் அக்கறை செலுத்தவும்.

**அதிர்ஷ்ட நாட்கள் :** 5,7. **அதிர்ஷ்ட எண்கள் :** 1, 9.